**கொடுத்தல்**

**வாசிக்க**: 2**கொரிந்தியர்** 9:1-15, **லூக்கா** 6:38

நமக்கு எப்போதும் யாராவது எதையாவது கொடுத்துக்கொண்டே இருந்தால் நாம் கொடுப்பவர்களை நேசிப்போம். அவர்கள் நல்லவர்கள் என்று கூறுவோம். கொடுக்காவிட்டால் அவர்கள் கெட்டவர்களாக நமக்கு மாறிவிடுவர்கள். ஆனால் வேதம் வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே நலம் என்று கூறுகிறது.

கால்கள் முடமான சிறுவன் பெஞ்சமின் அந்த ஆடிட்டோரியத்தில் முதல் வரிசையில் உட்க்கார்ந்து தன் கைத்தடியை பக்கத்தில் வைத்துவிட்டு பேச்சை கவனமாக கேட்டான். ஒரு மிஷனரி சீன தேசத்திலும், ஆப்ரிக்காவிலும் பஞ்சத்தினால் ஜனங்கள் படும் வேதனைகளைப் பற்றிக் கூறிக்கொண்டிருந்தார். கூட்டத்தின் முடிவில் அம்மக்களின் துயரைத் துடைக்க தங்களால் இயன்றதைக் கொடுக்க தருணம் கொடுக்கப்பட்டது. அமர்ந்திருந்த அநேக பணம் படைத்த ஆண், பெண் யாவரும் வரிசையில் நின்று தங்கள் விருப்பத்திற்கேற்ப கொடுத்தனர். சிறுவர், சிறுமியரும் தங்களிடமிருந்தவனவற்றை (சிறு பொருட்கள், பணம்) அங்கு வைக்கப்பட்டிருந்து தட்டுகளில் வைத்தனர். பெஞ்சமினுக்கு எதாவது கொடுக்கவேண்டும் என்ற வாஞ்சை இருந்தது. ஆனால் அவனிடம் ஒன்றுமேயில்லை. தன்னால் கொடுக்க முடியவில்லையே என வருந்தினான். முடிவில் தன் இருக்கையில் இருந்து எழுந்து தன் கைத்தடியை மேஜை மேல் வைத்துவிட்டு மகிழ்ச்சியோடு அந்த இடத்தைவிட்டு கடந்து சென்றான். அங்கிருந்த அத்தனை பேரும் அவனையே நோக்கினர். பெஞ்சமின் தனக்கு மிகவும் தேவையான ஒன்றை பிறருக்கு அளித்தான்.

நாம் பிறருக்கு எதைக் கொடுக்கிறோம்? இன்றைய நாளின் வணிக விளம்பரங்கள் கொஞ்சம் செலவுபண்ணி அதிகமாக பெற்றுக்கொள்வதாகக் கூறுகின்றன. தள்ளுபடி விற்பனை, பழைய பொருட்களைக் கொடுத்து புது பொருட்கள் வாங்குவது என பல விளம்பரங்கள் நம்மை உண்மையில் ஏமாற்றுகின்றன. நாம் கொடுக்கும்போது தான் நாம் பெற்றுக்கொள்கிறோம். நாம் விதைக்காமல் அறுவடை இல்லை. கொஞ்சம் விதைத்தால் கொஞ்சம் அறுப்போம். அன்பு இருக்கிறது என்றால் கொடுக்கும். தேவன் நாம் ஒவ்வொருவருக்கும் கொடுப்பதற்காக ஏதோ ஒன்றைக் கொடுத்திருக்கிறார். பணம், தாலந்துகள், நல்யோசனைகள், நேரம், திறமைகள், அதிகாரங்கள், பதவிகள் எனப்பல. நாம் நம் முதன்மையானவைகளை, பத்தில் ஒன்றை தேவனுக்காகவும் பிறருக்காகவும் மனப்பூர்வமாய், சந்தோஷமாய் கொடுக்கக்கடவோம். கொடுப்பது என்பது ஆசீர்வாதத்தின் வழி. அது அன்பு செலுத்தி நன்மை செய்வது. அது தேவனின் ராஜ்யத்தில் விதைப்பது.

**கேள்விகள்**:

1. நீ எதை பிறருக்கு கொடுக்க விரும்புகிறாய்?

2. அன்பு என்ன செய்யும்?

3. கொடுப்பது என்பது என்ன?